அருமை மகனே ! உனக்கு என்ன வேண்டும்?

அன்பர்களே!

காலம் காலமாக நாம் கேட்கும் ஒரு புளித்துப் போன வசனம் என்ன தெரியுமா?

‘‘ டேய்! உன்னை நானும் அம்மாவும் எப்படி எல்லாம் வளர்த்தோம் தெரியுமா?ஏனடா இப்படி எல்லாம் செய்கிறாய்?உனக்கு பதில் ஒரு தென்னங்கன்றை வளர்த்திருந்தால் காசாவது மிஞ்சுமே.....’’

ஏன் இப்படிப் பேசுகிறார்கள்.தன் பிள்ளை தான் எதிர்பார்த்த படி வளராததால் இப்படி மனம் கலங்கிப் பேசுகிறார்கள் மக்கள்.தென்னைமரம் வளர்ப்பது என்ன அவ்வளவு எளிதா?குழந்தை வளர்ப்பு என்பது ஒரு தெய்வீக வழிபாடு,ஆன்மீக சாதனை.‘‘நான்’’ என்ற ஆணவம் முதலில் மறையவேண்டும் பிள்ளையிடம்.சிவன் முருகனிடம் பாடம் கற்றது போல் நாம் நம் பிள்ளைகளிடம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடங்கள் எத்தனை எத்தனை?

நான் என் மாணவர்களிடம் தினமும் புதுப்புது விசயங்கள் கற்றுக்கொள்கிறேன்.அதனால் தான் மாண்டிசொரி ஆசிரியர்களை ‘‘ ஃபெஸிலிடேட்டர்’’ என்று அழைகிறார்.அதாவது நான் குழந்தைக்குள் இயற்கையாகவே உள்ள அறிவுவிதைகளை முளைக்கச் செய்யும் ஒரு உந்துதல் சக்திதான்.நான் குழந்தையின் வழியில் சென்று அவனது தேவைகளை,அவனின் அறிவுக்குத் தகுந்தபடி நுட்பம் ஆக்குகிறேன்.

உதாரணம்:ஒவ்வொரு பருவம் முடியும் போதும் என் மாணவர்களை அழைத்து என்னையும் ,என் வகுப்புகளையும் விமர்சிக்கக் கூறுவேன்.அவர்கள் கூறும் பல கருத்துக்களை மனதார ஏற்று என்னைப் பலவாறு மாற்றிக் கொள்கிறேன்.அதனால் என்னை அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.அதனால் அவ்வப்போது நான் கூறும் அறிவுரைகள் அவர்களால் ஏற்கப் படுகின்றன.

ஆனால் வீடுகளில் என்ன நடக்கிறது?பிறந்தது முதல் விவரம் தெரியும் வரை என்ன வேண்டும் ஆனாலும் குழந்தை சொன்னால் கேட்கிறோம்,செய்கிறோம்.அதே ஆறு வயதில் அவன் சரிக்கு சரியாகப் பேசுவதைக் கேட்க மறுக்கிறோம்.அங்கு தான் ப்ரச்சனை வருகிறது.பெற்றோர்களே!நீங்கள் பிள்ளைக்குக் கேட்டதெல்லாம் வாங்கித் தர வேண்டாம்.இதோ மாண்டிசொரி கூறும் சில அறிவுரைகளைப் பிபற்றினாலே போதும்,என்றும் உங்கள் பிள்ளை நீங்கள் ‘‘எள்’’ என்றால் ‘‘எண்ணெய்’’ என வருவான்.

*முதலில் நாம் தான் நம் பிள்ளையின் வெளிப்பாடு என்ற அறிவியல்---ஆன்மீக தத்துவத்தை உணர வேண்டும்.

*உங்கள் பிள்ளையின் மீது கவனத்துடன் கூடிய ‘‘நம்பிக்கை’’ வைக்க வேண்டும்.அவன் தவறினால் வாழ்க்கையே முடிந்தது போல் கலங்கிட வேண்டாம்.பிள்ளையின் வாழ்க்கை என்பது சைக்கிள் செயின் சுழற்சி போன்றது.சைக்கிள் ஓட ஓட சில சமயம் செயின் கழன்று கொள்ளும் இல்லையா?அதை உடனே சரி செய்வது போல் தான் பிள்ளைகளும் ஆங்காங்கே இடருவார்கள்.கவலை வேண்டாம்!பேசிப் புரிய வையுங்கள்.

*மக்களே !கடவுள் ஏன் மனிதனுக்குக் கூர்மையான பற்களும் நகங்களும் தரவில்லை தெரியுமா?அதைவித அற்புதமான ‘‘பேச்சு’’ என்ற ஆயுதத்தினை வழங்கியுள்ளான்.ஆனால் அதை வைத்து இன்று பிறர் மனம் புண்படும்படி தான் மனிதர்கள் நடந்து வருகிறார்கள்.

*அன்புடனும்,கண்டிப்புடனும் சற்று பிள்ளையிடம் பேசிப் பாருங்கள்.
உதாரணம்:என் வீட்டிற்கு என் மாமா மகன் தன் ஒன்றரை வயது மகளுடன் வந்தான்.கீழே இறக்கிவிடப்பட்டது குழந்தை.கைக்கு எட்டிய சாமானங்களை எல்லாம் எடுத்து வீசியது,மெதுவாக அதன் அருகில் சென்றேன்.பல முறைக் கீழே போடப்பட்ட சாமானங்களை மீண்டும் மீண்டும்

ஒழுங்கு செய்தேன்.சற்று நேரத்தில் அவளே தான் கீழே போட்ட சாமானங்களை என்னிடம் தந்து வைக்குமாறு செய்கை காட்டினாள்.இது எப்படி இருக்கு?
எனவே நாம் மீண்டும் மீண்டும் நமது செய்கைகளில் கட்டுப்பாட்டையும்,ஒழுங்கையும் கொண்டுவரும் போது பிள்ளைக்குள் சுயக்கட்டுப்பாடு வளர்கிறது என்பது மாண்டிசொரியின் அறிவியல் பூர்வமான முடிவு.நான் அதை தினமும் அனுபவிக்கிறேன்.

உதாரணம்:என் அமெரிக்க நண்பரின் ஆறு வயது மகன் இந்தியா வந்திருந்தான்.அவனுக்குப் பூக்கள் என்றால் கொள்ளை ஆசை.அவன் பாட்டி வீட்டில் அழகான மலர்த்தோட்டம் உள்ளது.அவனை அழைத்து மலர்களைப் பறிக்கக் கூறினேன்.என்ன சொன்னான் தெரியுமா?

'' மாமா,பூக்கள் பறிக்க என் பாட்டி--தாத்தாவின் பர்மிஷன் வாங்கி வருகிறேன்'' என்றான்.முதலில் எனக்குக் கோபம் வந்தது.என்னடா,ஒரு குழந்தைக்குப் பூப்பறிக்கக்கூட அனுமதி தேவையா?அதுவும் தன் பாட்டி வீட்டில்?ஆனால் மாண்டிசொரி உணர்த்தினார்,''தன் பாட்டி வீட்டுத் தோட்டப் பூக்களைப் பறிக்கக்கூட அனுமதி தேவை'' என்பதை அக்குழந்தை தன் தாயிடம் இருந்து கற்றுள்ளான்.இதுவன்றோ இயற்கையான சுயக்கட்டுப்பாடு?

*''டிஸிப்ளின்'' என்ற சொல்லை மாண்டிசொரி பயன்படுத்துவதில்லை.காரணம் அது பயத்தாலும்,அடக்குமுறையாலும் வருவது.அது நிலையில்லாதது.
உதாரணம்:காந்தியடிகளை அவர் பெற்றோர் எந்த வகையிலும் கத்தியோ,அடித்தோ எதையும் கட்டாயம் செய்யவில்லையே.கிரிக்கெட் பயிற்சியை காந்தி வெறுத்தார்,ஆனால் பள்ளி கட்டாயப் படுத்தியது.அவர் அப்பா தன் மகனின் மனநிலையை அறிந்து ப்ள்ளி முதல்வரிடம் பேசி பயிற்சியை விலக்கினார்.அதனால் காந்தி ஒன்றும் வாழ்வில் தோல்வி கானவில்லையே!

*''ஏற்கத் தக்க பழக்கமுறைகள்''{அக்ஸப்டபில் பிகேவியர்}என்று கூறுவோம்.

*சுயக்கட்டுப்பாடு என்பது செய்யும் செயல்களாலும் வேலைகலாலும் வளர்ச்சி அடையும்.அதனால் தான் பிள்ளைகளுக்கு உரிய வகையில் வீட்டை,வகுப்பினை வடிவமைத்துக் கொள்வது நன்று.கைக்கு எட்டும் படி கண்ணாடிப் பாத்திரங்களை வைத்துவிட்டு,''ஐயோ!!!உடைத்துவிட்டானே'' என்று கத்துவது தவறு.
*பிள்ளைக்குப் பிடிப்பில்லாத செயல்களை வலுக்கட்டாயமாக்காதீர்கள்.வலிமையைப் பயன் படுத்தி கட்டாயம் செய்யப்பட்ட எந்த காரியமும் பிள்ளையின் மனதை,உடல் வளர்ச்சியை,அறிவை பாதிக்கும்.ஆனால் அவனை அவன் வழியில் சென்று மெதுவாக பக்குவம் செய்ய வேண்டும்.

* நாம் நமது இஷ்டப்படி,நம் சமுதாய அந்தஸ்துக்கு பயந்து,வீண் ஆடம்பரம் காட்டவும் ,.புகழ்ச்சிக்கும் மயங்கிப் பிள்ளைகளை அடக்கியாள்கிறோம்.அதை விடுத்து,அவனுக்குள் உள்ள அறிவுத் தாகத்தைப் புரிந்து கொண்டு,அவ்னுக்கு ஏற்ப சாதனங்களை அளித்துப் பாருங்கள் ...அவனுடைய வளர்ச்சி எங்கே போகிறது என்று.!!!

நமது பொறுமையே குழந்தையின் வளர்ச்சி:

வர வர மனிதர்களுக்குப் பொறுமை என்பது எள் அளவு கூட இல்லாமல் போகிறது.எல்லாவற்றிலும் அவசரம்.கேட்டால் ''உலகமே போட்டியில் தான் வாழ்கிறது'' என்ற பதில் வேறு சொல்கிறார்கள்.

இதில் பலி ஆகும் ஆடுகள் ---பிள்ளைகள்.பத்து மாதம் காத்திருக்கக்கூட கர்ப்பினிகளுக்குப் பொறுமையில்லையே.'நமக்குத் தேவையான நல்லநாள் ,நட்சத்திரம் பார்த்தல்லவா மருத்துவரை சிசேரின் செய்யச் சொல்கிறோம்?பிறக்கும் காலம் கூட குழந்தையின் இஷ்டப்படி இல்லையே.ஏள்ளாஆம் உடனே நடக்க வேண்டும்.விட்டால் கருவிலேயே ஐ.டி

கற்று வெளிநாடு செல்லக் குழந்தைகளைப் பழக்கிவிடுவர் மக்கள்.அன்பர்களே!பிள்ளைக்குப் போதிய காலம் தருதல் மிகவும் அவசியம் .

அவனது ஒவ்வொரு வளர்ச்சியும் ஒரு கர்ப்ப காலம் தான்.அந்தந்த வயதில் அதற்குரிய தன்மைகள்,பழக்கங்கள்,அறிவு,அனுபவம் ,விளையாட்டு என எல்லாம் இருக்கும்.பட்டுப்புழுவை உடனே இறக்கை வைத்து வானத்தில் பறக்கவைக்க ஆசைப் பட்டால் அது தோல்வியில் தான முடியும்.

உதாரணம்:ஆறுவயது சிறுவன் அவனுக்கு உரிய உடல்,அறிவு மற்றும் அனுபவத்திற்கு ஏற்பவே படம் வரவான்.உடனே நாம் அதை ரவிவர்மாவுடன் ஒப்பிடுதல் தவறு.

பல பெற்றோர்கள் ,‘‘ போடா...உனக்குப் பெரிய சச்சின்னு நினைப்பு,பெரிசா பேட்ட தூக்கி வந்துட்டான்...’’ என்று ஏறனம் செய்வது அவனது மனதில் கருவிலேயே ஊனபட்டிருந்த ‘‘ அறிவுக் குருத்தை’’ கருக்கிவிடும்.

மாண்டிசொரி உங்களுக்கு ஒன்று சொல்கிறார் கேளுங்கள்!

‘‘ அன்புப் பெற்றோர்களே,ஆசிரியர்களே!சிறு சிலந்தி பிண்ணும் வலையை ரசிக்கிறோம்,பட்டுப்புழுவின் கூட்டினை ரசிக்கிறோம்,அவை என்ன முழுமை அடைந்தவையா?ஏன் உங்களால் பிள்ளைகளின் பிஞ்சுக் கைகள் செய்த களிமண் உருவங்களையும்,கிறுக்கல்களையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை?’’

மாண்டிசொரியும் கண்ணனும்:

உலகில் கண்ணனின் வாழ்க்கையை ரசிக்காதவர்கள் மிகவும் குறைவே.காரணம் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் அன்பின் பின்னணியில் வாழ்ந்தவன் கண்ணன்.அதனால் தான் அவனால் வாழ்க்கையின் துன்பங்களுக்கு என்ன காரணம் என்று கூறமுடிந்தது.

‘‘ எந்த ஒரு காரியத்தைச் செய்ய மட்டுமே மனிதனுக்கு உரிமை உள்ளது.அதன் பயனில் எவ்வித உரிமையும் இல்லை.எதிர்பார்ப்புடன் செய்யப்படும் காரியங்கள் தோல்வியுற்றால் அதன் விளைவு மிகவும் கொடியது.எனவே நாம் செய்வதை முழு ஊக்கத்துடனும்,ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் செய்துவிட வேண்டும்.பலனை எதிர்பார்க்கக் கூடாது’’ என்று கூறும் கீதை தான் மாண்டிசொரியின் அடிப்படைக் கல்விக் கொள்கை எனலாம்.பள்ளிகளில் நாங்கள் பல துறப் பாடங்களை எடுத்துக் கூறுவோம்,செயல்பாடுகளால் உணரவைப்போம்,பல பயிற்சிகளால் புரியவைப்போம்.ஆனால் உடனே அவற்றை ஒருகுழந்தை மனப்பாடம் செய்து அப்படியே ஒப்புவித்துவிட எதிர்பார்க்க மாட்டோம்.அவர்களுக்கு உரிய கால அவகாசம் தரப்படும்.அவர்களே புரியாவிட்டால் என்னிடம் வருவார்கள்.ஏன் தெரியுமா?குழந்தையின் மனம் ஒரு வயல்.அதில் நாம் தூவும் அறிவு விதைகள் எல்லாமே முளைத்து வேர் ஊனும் என்று எதிர்பார்த்தால் நாமே ஏமாறுவோம் என்கிறார் மாண்டிசொரி.

எனவே நாமாக ஒருபாட திட்டதினை வடித்து,அதை அவன் மூளைக்குள் தினித்தால் பயனில்லை.ஆனால் அதே வேளையில் மாண்டிசொரியின் பாடதிட்டங்கள் உலகின் மற்றபாடதிட்டங்களை விடச் சிறந்தவை.ஆறுவயது மாணவன் பித்தோகரஸ் தியரம் போடுவான்,பயாலஜியில் க்லாஸிபிக்கேஷன் செய்வான்.,கட்டுரைகள்,கவிதைகள் எழுதுவான்.தானாகவே என்ஸைக்ளோபீடியாவில் தன் விருப்பப்படி ஆய்வு செய்வான்.ஆறுவயதில் எதைப்பற்றியும் அடிப்படையில் அறிவை சேமித்துக் கொள்வான்.போதுமா?இன்னும் வேணுமா?

எனவே பிள்ளைக்கு வேண்டிய அறிவைத் தாருங்கள்.அதை அவன் புரிந்து கொண்டு பரிணாமம் பெற உதவுங்கள்,கால அவகாசம் தாருங்கள்.

குழந்தையின் மனவளர்ச்சியும் பெற்றோரும்:

நல்ல பள்ளி,ஆடைகள்,பொம்மைகள் ,உணவுகள் என பிள்ளைக்கு அன்பால் கடன்பட்டாவது வாரிவழங்கும் நாம் அவனுடைய மன அமைதி---மனவளர்ச்சி பற்றி யோசிக்கவும் வேண்டும்.

மனம் என்பது என்னவோ பெரியவர்கள் சம்பந்தப் பட்டது என்று தயவு செய்து நினைக்க வேண்டாம்.இன்று பிள்ளைகள் தான் அதிக மன உலைச்சலில் தவிக்கிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.அவன் சற்றுக் கவலையுடன் இருப்பினும்,'' ஏன்,எதற்கு இப்படி உள்ளாய்?என்ன ப்ரச்சனை?என்னிடம் சொல்,அப்பா நான் இருந்து உனக்கு உதவுகிறேன் '' என்று பேசுங்கள்.

குழந்தையின் மன அமைதியைக் கண்டு கொள்ளாமல் போவது,ஒரு கான்சர் நோயாளியைக் கைவிட்டுவிடுவதை விடக் கொடியது என்பார் மாண்டிசொரி.மறுபடியும் காந்தியின் வாழ்க்கையையே பார்ப்போமே!அவர் ஒவ்வொருமுறை மன அழுத்தத்தில் வருந்தும் போதும் அவர் பெற்றொர்கள் அவருக்கு அளித்த அரவணைப்பே அவரை ''மகாத்மா'' ஆக்கியது அல்லவா?

எனவே குழந்தையின் மனம்--பர்சனாலிட்டி---அறிவு வளர்ச்சியை மூன்று முக்கிய மனிதர்கள் கவனித்து வழிநடத்திட வேண்டும் என்கிறார் மாண்டிசொரி.

*அம்மா----அப்பா----ஆசிரியர்.அதனால் தான் நம் நாடு இவர்களை ஒரே நிலையில் வைத்து மதிக்கிறது.குறிப்பாக மாண்டிசொரி ஆசிரியர்கள் அம்மா--அப்பா என இரண்டு ரோலகளையும் செய்து குழந்தையைப் பேணுவது இன்னும் சிறப்பு.எனக்கு ஒவ்வொரு ஆண்டும் கடவுள் பல பல புதிய குழந்தைகளைத் தந்தருள்கிறார்.நான் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர்களின் வடிவம்.

எனவே அன்பர்களே!பிள்ளைக்குத் தேவை அன்பும்,அரவணைப்பும்,கவனிப்பும்,கண்டிப்பும்,நேரமும் தான்.ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய வயதில் அவனுடன் அவன் எண்ணத்திற்கும் செயலுக்கும் அறிவுக்கும் ஏற்ப உங்களால் முடி'ன்தவற்றைச் செய்து தாருங்கள்.
மாண்டிசொரியின் அறிவியல் பூர்வமான வேண்டுகோள்:
அம்மாவின் சினைமுட்டையும் அப்பாவின் உயிரணுவும் கலந்த தருணத்திலேயே உங்களின் ப்ரதிவடிவம் பிள்ளையாய் கருவாகி விட்டது.அப்பிள்ளை சாட் சாத் நீங்களே தான் என்பதை உணருங்கள்.உங்களின் நன்மைக்காக நியாயமாக என்ன செய்வீர்களோ அதைச் செய்யுங்கள் ப்ளீஸ்!!!

நன்றி!